358

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

358
SL
ணூ211, N11PP
N44.347.
189989

... Lourduswami, B.A., L.T.
...ining School, Trichinopoly.

ஜனவரி 1944 மலர் 7

...தனமுறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

...ர். 1. தனிப்பிரதி அணா 2.

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	101
2.	புத்தாண்டு வாழ்த்துப்பா	102
3.	யாப்பியல்	103
4.	மாணவர்களை மாண்புடையவராக ஆக்குவதெப்படி? ...	104
5.	இரு சொல் அலங்காரம்	105
6.	பூவின் மணம்	105
7.	ஆரம்ப வகுப்புகளில் பெருக்கல் வாய்ப்பாடு போதனை	106
8.	உங்களுக்குத் தெரியுமா?	108
9.	மூன்று மீன்களின் கதை	109
10.	யோசனைக்கணக்கு	110
11.	ஜீவராசிகளின் பாஷைகள்	111
12.	விடுகவி விடைகள்	113
13.	தேனீ வளர்த்தல்	114
14.	கோகினூர்	115
15.	பெற்றோர் சங்கங்கள்	118
16.	புதுவருஷ வாழ்த்து	120

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
[illegible] Months	11	0	0	20	0	[illegible]
6 Months	20	0	0	35	0	[illegible]
1 Year (11 Issues) ...	30	0	0	5[illegible]	[illegible]	[illegible]

THE REGISTRAR OF BOOKS
2 MAR 1944
MADRAS

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 34] 15 ஜனவரி 1944 [மலர் 7

பத்திராதிபர் குறிப்புகள்

189989

We wish all our Subscribers and well wishers a Most Happy and Prosperous New Year.

நம் அன்பார்ந்த பழைய, புது மாணவர்கட்கும், நம் சந்தாதாரர்களுக்கும், ஏனைய நம் 'பூங்கொத்து' நேயர்களுக்கும் எமது மனமுவந்த புதுவருட வாழ்த்து உரித்தாகுக.

நம் 'பூங்கொத்தை' நம் நேயர்கள் பரிவுடன் படித்துப் பயன் எய்துவதுடன் இன்னும் புதுச் சந்தாதாரர்களை அதிகம் சேர்த்து அவர்கட்கும் இதன் பயன் சித்திக்குமாறு முயற்சிப்பார்களாக. அத்துடன் நமது பூங்கொத்திற்கு விஷயதானமளித்தவர்களுக்கும், நமது 'பூங்கொத்து' மலர்ந்து சுகந்த வாசனையைப் பரவச்செய்ய இதுகாறும் உழைத்தும், உழைத்துக் கொண்டும் வருகின்ற அனைவர்க்கும் எமது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். மேலும் எல்லாம் வல்ல இறைவனது திருவருள் எல்லார்க்கும் சித்திக்குமாறு வேண்டுகின்றனம்.

புத்தாண்டு வாழ்த்துப்பா

(மலரன்பன்)

கடல்சூழ் புவிக்கொரு கண்ணெனத் தோன்றி
மடனிலா தகற்றி மாண்புற் றிலங்கும்
மேதகு புகழுற விளங்குறு மார். சி.
போதனா சாலையிற் பொற்புறத் தோன்றிடு
போதனா விஷயம் பொதிதரு கொத்தே!
உன்னா லியாங்கள் உற்றபன் னலங்கள்
என்னா லெடுத்தே இயம்புதற் கெளிதோ
தாய்மொழிப் போதனை தருதிற மொருசார்
தரைநூற் போதனை தருதிற மொருசார்
சரித்திரப் போதனை சாற்றுவை யொருசார்
இயற்கைப் போதனை யியம்புவை யொருசார்
பாட சாலை பயன்தரு முறைகள்
நாட எவற்கும் நவில்குவை யொருசார்
அரசியலார் நமக் களித்திடு கல்வித்
திறமுறு மறிக்கை செப்புவை யொருசார்
அணியியல் யாப்பியல் அறைகுவை யொருசார்
கணிதநூல் முறைபல கழறுவை யொருசார்
சிந்தனைக் கணக்கியல் செப்புவை யொருசார்
விடுகவி விடையொடே விளம்புவை யொருசார்
ஆசாற் றேவை யறைகுவை யொருசார்
தேசார் விளம்பரம் செப்புவை யொருசார்
பல்லிடத் தியலுறும் பாட சாலை
நல்லிய லனைத்தும் நவில்குவை யொருசார்
தேர்ச்சித் திறம்பல தெரிக்குவை யொருசார்
இன்னண பல்லிய லிடம்பெற வமைத்த
துன்னிய தூய்மை துலங்குறு மாசான்
பார்புகல் கீர்த்திப் பண்பிலியங்குமே
லூர்து சாமியா நுணங்குறு கேள்வியோன்
தண்ணளி யன்றோ தருகுவ ததனால்
அன்னவர் தாமு மவரால் மலரும்
மன்னுறு கீர்த்தி மலராம் நீயும்
பத்தொன் பானொடு நாற்பா னான்காம்
புத்தாண் டதனிலும் புகழ்பல பெற்று
வாழ்கபல் லாண்டு வாழ்கபல் லாண்டு
வாழ்கபல் லாண்டு மாநில மகிழவே.

யாப்பியல்

(M. A. S. Udaiyar, Tamil Pandit)

சீர் :—சீராவது மேற்கூறப்பட்ட அசைகள் தனித்தாயினும் தொடர்ந்தாயினும் அடிக்கு உறுப்பாக வருவதாம். அது, அசைச்சீர், (ஓரசைச்சீர்) இயற்சீர் (ஈரசைச்சீர்) உரிச்சீர் (மூவசைச்சீர்) பொதுச்சீர் (நாலசைச்சீர்) என நான்குவகைப்படும். அவற்றுள், **அசைச்சீராவது:** நேரசையாயினும், நிரையசையாயினும் தனித்துச் சீராய் வருவதாம். (உ-ம்.) "நலமாட்சி நல்லவர் **கோள்**" எனவும், கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் னிற்க வதற்குத் **தக** எனவும் வரும். இவற்றுள் '**கோள்**' என நேரசை தனித்தும், '**தக**' என நிரையசை தனித்தும் சீராயின. பிறவுமிவ்வாறே கொள்க.

குறிப்பு :—மேற்கூறிய அசைச்சீர் பெரும்பாலும் வெண்பாவி னீற்றிலும் சிறுபான்மை பிறபாக்களினும் வரும். இச்சீர்கட்கு முறையே **நாள்** எனவும் **மலர்** எனவும் உதாரண வாய்பாடு கூறப்படும்.

இயற்சீர் :—இயற்சீராவது இரண்டிரண்டசைகள் சேர்ந்து வருதலாலாகிய சீர்கள் நான்குமாம். இரண்டிரண்டசைகள் சேருமிடத்து, 'நேர்நேர்' என இரண்டு நேரசையும், 'நிரைநேர்' என ஒரு நிரையசையும், ஒரு நேரசையும், 'நிரைநிரை' என இரண்டு நிரையசையும், 'நேர்நிரை' என ஒரு நேரசையும் ஒரு நிரையசையும் ஆக நான்குவகையாகச் சேரும். (உ-ம்.)

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து"—இச்செய்யுளுள் '**கல்வி**'

என இரு நேரசையும், 'குருகிற்' என ஒரு நிரையசையும் நேரசையும், 'கரையில' என இரு நிரையசையும், 'கற்பவர்' என ஒரு நேரசையும் நிரையசையும் சீராயினவாறு காண்க.

குறிப்பு :—இச்சீர்கள் பிற பாக்களினும் வருமேனும் ஆசிரியப்பாவிற்குரியனவாம். இவற்றிற்கு முறையே '**நேர் நேர்**' தேமா, '**நிரைநேர்**' புளிமா, '**நிரை நிரை**' கருவிளம், '**நேர் நிரை**' கூவிளம் என உதாரண வாய்ப்பாடுகள் கூறப்படும்.

உபாத்தியாயர் :—(கிட்டுவைக் கூப்பிட்டு) ராமு யானையைப்பற்றிய வியாஸமும், பட்டு எழுதிய வியாஸமும் ஒன்றாகவே இருக்கிறதே!

கிட்டு :—இல்லை ஸார். இரண்டு பேரும் ஒரே யானையைப்பற்றித்தான் எழுதியிருக்கிறார்கள்.

V. Periaswamy, Pupil.

மாணவர்களை மாண்புடையவராக ஆக்குவதெப்படி?

(T. S. G.)

மாண்பு என்பது சிறந்த மனப்பான்மையைக் குறிக்கும். இது மாணவரிடை அமையவேண்டும். அதனால் மனப்பான்மை வளர்ந்து ஓங்கவேண்டுமென்பது பொருள். கல்வியின் முக்கிய அம்சங்களில் இஃது ஒன்று. பாடசாலைப் பாடங்கள் இந்த அம்சத்தைப்பற்றிக் கூறுகின்றனவா? நாம் கற்பிக்கும் ஒவ்வொரு பாடத்தின் நோக்கம் என்பதின் முடிவு யாது? இயற்கைப்பாடம், பூகோளம், சரித்திரம், ஓவியம், விளையாட்டு, இலக்கியம் (பாஷை) முதலியவற்றின் இலக்ஷியம் என்னென்ன?

விஷய ஞானம் அல்லது அறிவு ஏற்படுவது ஒரு முக்கிய நோக்கம்தான். அதோடு மாணவரின் மனதும் கவனிக்கப்படும். தேர்ச்சி என்றால் அறிவைப்பற்றியது மாத்திரம் அன்று, சரீரம், மனம் இவற்றின் வளர்ச்சியும் அடங்கும். மாணவரின் தேகம், புத்தி, மனம் இவை ஒழுங்குடன் சீராய் வளர்தல்தான் அழகு ஆகும். எதற்கும் மனம் வேண்டியிருப்பதையுன்னி, மனத்தையும்-மாண்பையும் முன்னர் கருதுகின்றோம். பாடசாலைப் பாடக்கிரமங்களை வகுத்துள்ளோர் மேற்கூறிய அம்சத்தை மனதிற்கொண்டே அவற்றை ஏற்படுத்தியுள்ளனர். ஆசிரியர்களாகிய நாம் அவர்களுடன் ஒத்துழைத்து மாணவர்களது மாண்பை வளர்க்கவேண்டும்.

ஆசிரியர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடம் நடத்தும் தருவாயில் "நாம் எந்த அளவில் மாணவர்களின் மாண்பை வளர்க்க உதவியுள்ளோம்" எனத் தமக்குத்தானே வினவி வருவார்களானால், சந்தேகமின்றி மாணவர் மாண்பு சீராகி வரக் காணலாகும்.

மாண்பு என்பதை மனம் விசாலித்தல் என்ற ஒரு பொருளைக் கொண்டாவது ஆராயலாம். இதற்குச் சில பாடங்களை நடத்தும் போது நாம் நம் மனத்திற்கொண்டு மாணவர்களைப் பழக்கும் விதத்தைப் பார்ப்போம். (1) இயற்கைப்பாடம்.—உல்லாசப்பிரயாணம் எதற்காக? விஷய அறிவுடன்-இயற்கையழகை மெச்சவும் இன்னும் கற்பனாசக்திகளைத் தூண்டவும் உதவிக்கொள்ள அல்லவா? (2) விளையாட்டை நடத்துகிறோம்.—உடல் நலம் பேணத்தான். அதோடு பொறுமை, நட்பு, நியாயம், விட்டுக்கொடுத்தல் (பெருந்தன்மை) முதலிய மனப்பான்மைகளை வளர்க்க உத்தேசமில்லையா? (3) பூகோளம்.—அந்நிய நாட்டுச் சிறுவர்களைப்பற்றிய ஒரு பாடம் நடத்தும் ஆசிரியன் மனப்பான்மை எப்படி இருக்கும்? அதனை மாணவர்க்குப் புலப்படுத்துகின்றனர் அன்றோ. (4) சரித்திரம்.—நம் நாட்டு வீரமணிகளின் சரித்திரம்-அவர்களது ஜீவியம்-பரோபகாரம் முதலியன மாணவர்களின் மனக்கண் முன் தோன்றச் செய்யும் ஆசிரியரின் மனம்தான் என்ன? (5) இலக்கியம்.—கீழ் வகுப்பிலிருந்து

மேல் வகுப்பு வரை - பாஷைப்பாடங்கள் - கதைகள் - கட்டுரைகள், பாடல்கள், பாக்கள் முதலியன மொழி வளர்ச்சியுடன் மன வளர்ச்சிக்கும் எவ்வாறு உதவுகின்றனவென்பதை ஆசிரியர் ஓர்ந்துபார்க்கட்டும். மாணவரின் மாண்பு வளர்வதற்கு அவை காரணமாகாவா?

இவ்வாறு ஆசிரியர் தம்மால் இயன்றவரை மாணவர்களது மன வளர்ச்சிக்காக முயற்சி செய்து வந்தால் அவர்களது மனது விசாலிக்கும். மனம் விரிந்தால் மாண்பு அமையும். ஏதோ இரண்டொரு விஷயந்தான் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. ஆசிரியருக்கு மனமுண்டானால் வழியுண்டு. மாணவர்களது மாண்பு சிறக்க எத்தனையோ வழிபாடுகளையும் காண்பர்.

இரு சொல் அலங்காரம்

(G. Abel)

(1) அரக்கனை வீமன் அடித்தது எதனால்?
அரும்பாலர் கண் விழிப்பது எதனால்?—கதையினால்.

(2) கப்பல் பிரயாணமின்மையேன்?
கந்தன் காலம் கழிப்பதேன்?—வேலையின்மையால்.

(3) வாழை வீழ்த்தப்படுவதெதனால்?
வாழாது ஆபேல் மாண்டது யாரால்—காயினால்.

(4) நரி ஊளையிடுவதேன்?
நஷ்டம் இலாபம் ஆவதேன்?—மதியினால்.

(5) கொடிகள் மேலே படர்வதேன்?
கொழுத்த காளை சண்டையிடுவதேன்?—கொம்பினால்.

(6) மக்கள் மனம் களிப்பதேன்?
மல்லிகை மலர் சிறப்பதேன்?—மணத்தினால்.

பூவின் மணம்

பூ வுலகில் பூவை விரும்பாதார் இரார் இப் பூ
ங் கொடி பூக்கும் நல்ல வாசமுள்ள பூ ங்
கோ த்தை ரசித்து இன்னும் அநேக பூங் கோ
த் தைப் பலரறிந்து நுகரும்படியும் சேர் த்
து க் கொண்டு வரும்படி அழைக்கிற து

ஆரம்ப வகுப்புகளில் பெருக்கல் வாய்ப்பாடு போதனை

(K. Arokiam)

ஆரம்பக் கணிதத்தின் அடிப்படை எண்களும் அவற்றின் நான்கு முக்கிய கிரிகைகளுமாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டே கணித பாடத்தின் மற்ற அம்சங்களைப் போதிக்கிறோம். நான்கு முக்கிய கிரியைகளுள் பெருக்கலும் ஒன்றாகும். பெருக்கல் கணக்கு களைச் செய்ய இன்றியமையாத சாதனமாக இருப்பது பெருக்கல் வாய்ப்பாடுகள் என்பதை யாவரும் அறிவர். ஆதலின் இப் பெருக்கல் வாய்ப்பாடுகளைச் சற்று ஆராய்வோம்.

இரண்டாம் வகுப்பில் 2, 5, 10 என்ற சுலபமான வாய்ப்பாடு களும், மூன்றும் வகுப்பில் 3, 4, 6, 7, 8, 9 என்ற வாய்ப்பாடு களும், நான்காம் வகுப்பில் 11, 12, 16 என்ற வாய்ப்பாடுகளும், போதிக்கப்படுகின்றன. இவ் வாய்ப்பாடுகளைப் போதிக்கக் கீழ்க் கண்ட உபகரணங்கள் மிகவும் பயன்படும். உதாரணமாக மூன்றும் வாய்ப்பாட்டைப் போதிப்பதாக வைத்துக்கொள்வோம்.

உபகரணங்கள்:—3 புள்ளிகள் இடப்பட்ட தனி அட்டைகள் 55. 1, 2, **3**, 4, 5, **6**, என ஒன்றன்கீழ் ஒன்றாக 28, 29, **30**, வரை வரிசையாக மூன்றின் மடங்குகளை மட்டும் தனி வர்ணத்தில் காட்டி எழுதப்பட்டுள்ள சார்ட், **சொருகுப்பலகை:** நீள வசத்தில் 10 துவாரங்களும், அகலவசத்தில் 10 துவாரங்களும், ஆக 100 துவாரங் கள் உள்ள பலகையும், அத்துவாரங்களுக்குப் பொருத்தமான சொருக்கட்டைகளும்; மூன்று மூன்றாகக் கட்டப்பட்ட ஈர்க்கு அல்லது தீப்பெட்டிக் குச்சிகள், மூன்றும் வாய்ப்பாடு எழுதப்பட்ட சார்ட்டு, பல்வித அப்பியாச அட்டைகள்.

போதனுமுறை:—பெருக்கல் வாய்ப்பாட்டைப் போதிக்கும் ஆசி ரியர் கீழ்க்கண்ட கல்விப்படிகளைக் கவனிக்கவேண்டும். (1) பெருக்கல் வாய்ப்பாட்டின் ஆக்கம், (2) வாய்ப்பாட்டின் பகுதிகளைப் படிப்படி யாகக் கற்றல், (3) வாய்ப்பாட்டை மனப்பாடம் செய்தல். இக் கல்விப் படிகளைத் திருஷ்டாந்தப்படுத்தி மேற்படி உபகரணங்களைக் கையாடி வாய்ப்பாடு போதிக்கும் முறையை ஆராய்வோம்.

ஆரம்பத்தில் பிள்ளைகளை, 3 புள்ளிகள் இட்ட அட்டைகளை ஒன்றன் கீழ் ஒன்றாக முதல் வரிசையில் ஒரு அட்டையும், இரண்டாம் வரிசையில் இரண்டும், முறையே பத்தாம் வரிசையில் பத்துமாக 55 அட்டைகளையும் ஒழுங்காக அடுக்கச்செய். ஒவ்வொரு வரிசையிலும், தனித்தனியே எத்தனை அட்டைகள் இருக்கின்றன. அந்த எண்ணிக்கை உள்ள அட்டைகளில் எத்தனை புள்ளிகள் இருக்கின்றன என வருவி. உ-ம்: 3 அட்டைகள் உள்ள வரிசையில் ஒன்பது புள்ளிகள்......

1, 2, 3, என்று மூன்றின் மடங்குகள் எழுதப்பட்ட சார்ட்டைக் கையாடி மூன்றின் மடங்குகளை விளக்கிப் பையன்களைச் சொல்லச் செய்தல் வேண்டும். சார்ட்டைத் தொங்கவிட்டு, அதில் கண்டபடி சிலேட்டில் எழுதச்செய்யலாம். இங்ஙனம் எண்களின் மடங்குகளை வரிசையாக எழுதிக் கண்டுபிடித்தலைச் சுருக்கமாக வாய்ப்பாடுகளின் உதவியால் படித்து அறியலாம் என நோக்கத்தை வெளியிடு.

சொருகுப்பலகையை எடு. முதல் வரிசையில் உள்ள துவாரங்கள் மூன்றில், 3 கட்டைகளைச் சொருகச்செய். எத்தனை வரிசையில் எத்தனை கட்டைகள் இருக்கின்றன எனக்கேள். ஒரு வரிசையில் 3 கட்டைகள் இருக்கின்றன என்ற பதிலை வருவி. எத்தனை விசை 3 கட்டைகளை ஒரு வரிசையில் சொருகினாய் எனக் கேட்டு ஒருவிசை மூன்று கட்டைகளை ஒரு வரிசையில் சொருகினேன் என்றபதிலை வருவி. அடுத்த வரிசையில் இன்னும் 3 கட்டைகளைச்சொருகி, முன் கண்டபடி கேள்விகள் கேட்டு இரண்டுவிசை 3 கட்டைகளை இரண்டு வரிசைகளில் சொருக மொத்தம் 6 கட்டைகள். இங்ஙனமே 3 கட்டைகளை மூன்றுதடவை 3 வரிசைகளில் சொருகினால் 9 கட்டைகள் என்று வருவி. இம்முறையிலேயே 10 வரிசைகளிலும் ஒவ்வொன்றிலும் மூன்று மூன்றாகச்சொருகி 10 வரிசைகளில் மூன்று கட்டைகளாகப் பத்துத்தடவை சொருக மொத்தம் 30 ஆகும்.

இதன்பின்னர் தக்க கேள்விகளைக்கொண்டு, ஒரு தடவை மூன்று கட்டைகளை ஒரு வரிசையில் சொருக 3 கட்டைகள் என்பதைச் சுருக்கமாக ஒரு தடவை மூன்று 3, இரண்டுதடவை மூன்று 6, மூன்று தடவை மூன்று 9 என்று வருவித்துக் கரும்பலகையில் எழுதி இப்படியே பத்துத்தடவை மூன்று 30 என்பது வரை எழுதிப் பையன்களை வாசிக்கச்செய்.

இங்ஙனம் கரும்பலகையில் எழுதி வாசித்தபின் உபகரணங்களை எடுத்துவிடு. எழுதியதை அழித்துவிட்டு ஒருதடவை 3 எத்தனை, இரண்டுதடவை மூன்று எத்தனை எனக்கேட்டுப் பதில்வருவி. இதைச் சுருக்கமாக ஒரு மூன்று மூன்று, இரு மூன்று ஆறு என்று முறையே சொல்லவேண்டும். இதை எண் குறிப்பால் $1 \times 3 = 3$, $2 \times 3 = 6$ என எழுதவேண்டும் என்று விளக்கிப், பெருக்கல் வாய்ப்பாட்டின் ஒவ்வொரு பகுதியையும் வருவித்து எழுதி வாய்ப்பாட்டைப் பூர்த்தியாக்கு. பின் வாய்ப்பாட்டை வாசித்துக்காட்டிப் பையன்களையும் வாசிக்கச்செய். இதன் பின்னரே மாணவர் வாய்ப்பாட்டை மனப்பாடம் செய்யவேண்டும்.

மேற்கண்டபடி கட்டைகளை கையாடமுடியாவிடில், இம்முறையிலேயே கட்டுக்குச்சிகளைக் கையாடிப் படிப்படியாக மாணவரிடமிருந்து பதில் வருவித்துப் பெருக்கல் வாய்ப்பாட்டைப் போதிக்க வேண்டும். இறுதியில் அப்யாச அட்டைகளையும், சிறு மனக்கணக்குகளையும் கொடுக்கலாம்.

(உ-ம்.) 7×3=? 9×3=?

6 தேங்காய்களுக்கு எத்தனை கண்கள்?

8 முக்காலிகளின் கால்கள் எத்தனை?

15 மிட்டாய்களை மூன்று மூன்ருக எத்தனைபேருக்குக் கொடுக்கலாம்?

மேற்கண்டவாறு ஆசிரியர்கள் வாய்ப்பாடுகளைப் போதிப்பரேல், மாணவர் விளையாட்டுமுறையிலும், செயல் முறையிலும் வாய்ப்பாட்டை எளிதில் அறிவர். கணித பாடத்தில் உற்சாகம் ஏற்பட மாணவர் ஆர்வத்துடன் கற்பார்கள். நம் முயற்சியும் சிறந்த பயனைத் தரும்.

உங்களுக்குத் தெரியுமா?

1. இடிக்குமுன் மின்னல் காண்கிருேமல்லவா? ஏன் அப்படி? ஏனென்ருல் வெளிச்ச ரேகைகள் (வெளிச்சம்) ஒரு ஸெக்கண்டுக்கு 1,86,000 மைல் வீதம் செல்லுகிறது. ஆனுல் ஒலி (சத்தம்) ஒரு ஸெக்கண்டுக்கு 1100 அடிகள் வீதம்தான் பரவுகிறது. ஆகையால் சப்த அலைகள் நம் காதை அடைய அதிக நேரமாகிறது.

2. ஏன் ஒரு தேனீ குளவியைப்போல் பலதடவை கொட்டுவதில்லை? தேனீயின் கொடுக்கானது இரு பிளவாக ரம்பத்தைப்போல் இருக்கிறது. தேனீ தன் கொடுக்கை நம் சதைக்குள் செலுத்தி வெளியே இழுக்கும்போது, கொடுக்கிலுள்ள ரம்பம்போன்ற பாகம் உள்நோக்கி இருப்பதால் வெளியே சுலபமாய் வருவதில்லை. தேனீ முயன்று இழுக்கும்போது அப்பாகம்—கொடுக்கின்பாகம் அறுபட்டு அல்லது சிதைந்து போகிறது. ஆனுல் குளவியின் கொடுக்கின் நுனி குத்துவாளைப்போல் கூர்மையாய் இருப்பதால் அது தசையில் செலுத்திய தன் கொடுக்கைச் சுலபமாக வெளியே இழுத்துக்கொள்ளுகிறது.

M. Hirudayanathan.

3. துருக்கிதேசத்தில் உள்ள காராஅமிட் நகரில் இருக்கும் பள்ளிவாசலை கட்டும்போது சுண்ணும்பு காரையுடன் 680 மூட்டை கஸ்தூரியை கலந்து பூசினுர்களாம். மேற்படி பள்ளிவாசல் கட்டி 1300 வருஷங்களாகியும் இன்னும் கஸ்தூரி மணம் கமழ்கின்றதாம்.

4. அமெரிக்க தேசத்தில் உள்ள எர்னஸ்ட் வின்சன்ட் ரைட் என்பவர் 50,000 வார்த்தை கொண்ட ஒரு நாவல் எழுதியிருக்கிருராம் அதில் E என்ற எழுத்தே கிடையாதாம்.

E. Paul Natesan,
H. M. W. M. Boys School,
Beemanagar.

மூன்று மீன்களின் கதை

(S. A. Ranganathan)

முன்னொரு காலத்தில் ஒரு அழகிய குளத்தில் மூன்று மீன்கள் சந்தோஷமாகக்கூடி வாழ்ந்தன. அவைகளில் ஒன்றுக்கு **அறிவாளி** என்றும், மற்றொன்றுக்கு **நிதானபுத்தி** என்றும், மூன்றாம் மீனுக்கு **அறிவீனன்** என்றும் பெயர். இவ்வாறு இவைகள் இனிது வாழும் நாளில் **அறிவாளி** குளத்திலிருந்து வெளிச்செல்லும் சிறு வாய்க்காலைக் கண்டறிந்தது. பிறகு அது தன் தோழ மீன்களுக்கு அதைக் காட்டி "நாம் நம் குளத்திலிருந்து வெளியே போகப் பிரியப்படுங்கால் இச்சிறு வாய்க்கால் நமக்கு மிகவும் பிரயோசனப்படும்" என்று சொல்லிற்று. அதைக்கேட்ட **நிதானபுத்தி** "ஏன்? நாம் இக்குளத்தை விட்டுப் போகப் பிரியப்படவேண்டுமா?" என்று வினவியது.

"ஆஹா! பேஷ்! நாங்கள் வெட்டிக்கதையைக் கேட்கப் பிரியப் படவில்லை. இவ்வாறு பேசினால் நான் உங்களை அக்கரைக்குத் துரத்தி விடுவேன்" என்று எச்சரிக்கை செய்தது **அறிவீனன்**. அழகான அம்புகள் தண்ணீருக்குள் பாய்ந்தாற்போல் மூன்று மீன்களும் தண்ணீருக்குள் மறைந்தன. கரையிலுட்கார்ந்திருந்த இரு செம்படவர்கள் அதை உற்று நோக்கினார்கள். அம்மீன்கள் இச்செம்படவர்களின் நிழலில் மறைந்து தங்கின. கூடிய சீக்கிரத்தில் இங்கு ஒருநாள் மீன் பிடிப்பதாக அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை இம்மீன்கள் அறியலாயின.

அச்செம்படவர்கள் போகும்வரை வெகு அமைதியாகத் தங்கின. பிறகு, விரைவில் **அறிவாளி** குளத்திலிருந்து வாய்க்காலின் வழியாக வெளியே புறப்பட்டு, யாவரும் தெரியாத இடத்துக்குத் தப்பி ஓடிற்று.

"செம்படவர்கள் ஒருக்காலும் இங்கு வரமாட்டார்கள். நான் இச்சிறு குளத்தினின்றும் செல்லமாட்டேன். வெகு விரைவில் அறிவாளியும் தனக்குள் வெட்கமுற்று இங்கு வந்துவிடும் பாருங்கள்" என்றது **அறிவீனன்**.

மறுநாட் காலையில் இரு செம்படவர்களும் குளத்தினருகே வந்தடைந்தனர். வந்ததும் மீன்கள் குளத்தினின்றும் தப்பியோடாதிருக்கும்பொருட்டு கால்வாயின் மடையில் அவர்கள் வலையை விரித்தனர். **நிதானபுத்தி** செம்படவர்களின் நிழலில் கல்லுக்குள்ளிருந்து கொண்டு இதைக்கண்டு மிகவும் வருத்தமுற்றது. **நிதானபுத்தி** பின்பு ஆழ்ந்து யோசித்து திடீரென குதித்து இறந்ததுபோல தண்ணீரின் மேல் மிதந்து பாசாங்கு செய்தது.

இதைப் பார்த்த செம்படவன் "இறந்த மீனை வெளியே எறி" என்று மற்றவனிடம் உரைத்தான். இதைக்கேட்ட **நிதானபுத்தி**

189989

சந்தோஷித்து இருக்கும் சமயத்து நிதானபுத்தி செம்படவர்களால் வெளியே எறியப்பட்டது.

பிறகு நிதானபுத்தி புற்களில் ஒட்டிக்கொண்டு சில வினாடிகள் தங்கிற்று. தான் திரும்பத் தண்ணீருக்குள் செல்லாவிடில் இறக்க நேரிடுமென்பதை உணர்ந்தது.

ஆழ்ந்த யோசனையின் பயனாக நிதானபுத்தி தனது வலிமையை ஒருங்கே திரட்டி தண்ணீரில் மெல்லக்குதித்தது. பிறகு தான் சிறு வாய்க்காலில் இருப்பதை உணர்ந்து பரம திருப்தியுடன் நீந்தி தப்பிச் சென்றது.

அந்தோ! பாவம்!! அறிவீனன்மட்டும் செம்படவர்களால் பிடிபட்டது. இதற்கும் மற்ற இரு மீன்களைப்போலவே தப்பிப் பிழைக்கச் சந்தர்ப்பமிருந்தும் அதற்கு அதைத் தக்கவாறு பயன்படுத்தக் கூடிய அறிவு இல்லாமற்போய்விட்டதுபோலும்!

யோசனைக்கணக்கு

ஒருவன் கடைக்குப்போகும்போது அவனது நண்பர்களான ஜான் என்பவனும் ஜேம்ஸ் என்பவனும் முறையே ரூ. 3-0-0-ம் ரூ. 2-4-0-ம் அவனிடம் கொடுத்து தேங்காய்கள் வாங்கிவரும்படி சொன்னார்கள். அவன் இவர்களுடைய பணத்திற்கு 49 தேங்காய்கள் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்துப்போய்விட்டான். ஜானும் ஜேம்ஸும் ஷை தேங்காய்களைத் தத்தம் பணத்திற்கு எப்படிப் பிரித்துக் கொள்ளவேண்டும்? ஒவ்வொருவருக்கும் எத்தனை தேங்காய்கள்?

M. Devaraj,
Assistant, Bd. Boys' School, Sengattupatti.

விகடம்

தகப்பனார்:—(ஸப்ரெஜிஸ்ட்ரார் குமாஸ்தா). அடயப்பா, எழுதி எழுதி கைவிரல் ஒடிந்துபோயிற்று.

மகன்:—வேணும், வேணும். என்னைப்போல நீங்க படிக்கிறப்போ வாத்தியாரை இம்போஸிஷன் எழுதாமல் ஏமாற்றல்லே! அதுக்குத்தான் இப்போ —.

V. Krishnaswmy Aiyar,
Pethachinagar.

ஜீவராசிகளின் பாஷைகள்

(T. Savarirajan)

நம் முன்னோர்களின் வரலாற்றைப் படிக்கப்புகுங்கால், அவர்கள் அநேகப் பிராணிகளுடன் தாமும் பேசினதாகக் காண்கின்றோம். கதைகளில் பிரசித்திபெற்ற "அரேபியன் நைட்ஸ்" என்ற கதைக் கொத்தில் பக்ஷி, மிருகம் முதலியவற்றின் பாஷைகளை அறிந்திருந்த ஒரு வர்த்தகன் எவ்வாறு தன் மனைவியை நையப் புடைத்தான் என்ற வரலாற்றைக் கேட்டும், படித்தும் இன்புறாதவர்கள் யார் இருக்கின்றனர்? உத்தம ஞானியான "சாலமோன்" மன்னன் ஜீவராசிகளின் பாஷையை அறிந்திருந்தான் என்பதற்குச் சான்றுகள் உள. பாட்டிமார்கள் தங்கள் பேரப்பிள்ளைகளுக்கு எடுத்துச்சொல்லும் அத்தனை கதைகளும், கழுதை பேசினதாயும், நாய் கதைசொன்னதாகவும்தான் இருக்கின்றன. நாமும் சிறுவராய் இருந்தபொழுது கேட்டோம். இன்றும் நம் மாணவச் சிறுவர்களுக்கு "சீ, சீ, இந்தப் பழம் புளிக்கும்" என்ற கதையைத்தான் சொல்லுகிறோம். குழந்தைகளும் மிருகங்கள் பேசினதாகக் கதைகள் இருந்தால்தான் உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் கேட்கின்றார்கள். இதன் விந்தைதான் என்னவென்று தெரியவில்லை.

உண்மையில் ஜீவஜந்துக்கள் பேசுகின்றனவா? அவ்விதம் பேசியதுண்டா? பேசுமா? என்ற கேள்விகள் சாதாரணமாய் எழுவது சகஜம். ஜீவராசிகளுக்குப் பேசும் தன்மையோ, அல்லது தங்கள் கருத்தைப் பிறருக்கு வெளியிடவோ முடியாதென்று திருத்தமாய்ச் சொல்ல முன்வர அநேகர் இருக்கலாம். உருவத்தில் ஒருவாறு மனிதனை ஒத்திருக்கும் "உராங் உடான்" என்னும் குரங்கு இன மிருகங் கூட ஒன்றோடொன்று பேசும் திறமை பெறவில்லை என்றும், மனிதனுக்கும் மற்ற ஜந்துக்களுக்குமுள்ள வேற்றுமை நிபந்தனைகள் எவ்வளவு குறைவுபட்டாலும், பாஷை என்ற ஒரு தடையை மாத்திரம் ஒருவராலும் தடுக்கக்கூடாததாயிருக்கிறதென்றும், மனிதனுக்கு இருப்பதுபோல் தன் கருத்தை வெளியிடயிருக்கும் ஆற்றல் மிருகங்களுக்கில்லையென்றும், பல கருத்துக்களை ஒன்றுசேர்த்து வெளியிடும் திறன் ஜந்துக்களுக்குக் கிடையாதென்றும் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஆனால் நல்ல வசந்த காலத்தில் ஒரு சிங்காரத் தோட்டத்தின் மத்தியில் உட்கார்ந்திருந்தால், எத்தனையோ ஜீவஜந்துக்கள் நம் கண்களுக்குத் தென்படுகின்றன. குயில் முதலிய பறவைகள் விநோதமாய்க்கூவி விளையாடுவதையும், வண்டுகள் ரீங்காரம் செய்து பூக்கள் தோறும் செல்வதைக்காணலாம். இவ்விதம் அநேக ஜந்துக்கள் சப்தம்செய்து ஊசலாடுவதைக்காண்கிறோம். நம் வீட்டிலுள்ள ஆடுகளும், பூனைகளும், மாடுகளும், கோழிகளும், குதிரைகளும் ஒன்றையொன்றுக்கூவி அழைப்பதைக் காணுமல் இருத்தல்முடியாது. இவை

கள் செய்யும் சப்தத்தின் பாகுபாடு புரியாவிடினும், அவைகளின் நடவடிக்கையிலிருந்து அவை ஒன்றுக்கொன்று பேசிக்கொள்வதாக மட்டும் தெரிகின்றது. ஒரு காகத்திற்குமட்டும் பிரத்தியேகமாகக் கொஞ்சம் சாதம் வைத்தாலும், அது உடனே தன் தொண்டைக் கிழியக் கூவி அழைக்க அநேகம் அதன் இனத்தார் வந்து கூடுகின்ற னர். அவைகளின் சப்தம் அதிகமாக ஆகாயத் தோட்டிகளின் கூட்ட மும் பெருகுகின்றது. முதல் காகத்தின் பாஷையை மற்ற காகங்கள் அறியாவிடில் அங்குவந்து கூடி விருந்தில் கலந்திருக்கமுடியுமா? கன்றின் பாஷையை அறியாவிடில் புல் மைதானத்தில் இருக்கும் பசு தன் கன்றின் தொனிக்கேட்டு பதர ஓடிவந்து பால் சுரக்கமுடியுமா? ஒன்றின் உள்ளக்குறிப்பை அறியமுடியாவிடில் எவ்விதம் ஒரு எருது மற்றொரு எருதின் முதுகைத் தன் நாக்கினால் தடவிக்கொடுத்து அதன் நணவைப் போக்கமுடியும்? ஒரு மிருகத்தின் இயல்பு மற்றொன்றுக்கு தெரியாவிடில் எங்ஙனம் எலும்பைத்தின்னும் நாய் மற்றொரு நாய் தன்னிடம் வந்து தன் பங்கை அபகரியாது இருக்க வள், வள் என்று அதன்மேல் பாய்ந்துக் கடிக்கமுடியும்? இவ்விதம் பார்த்துக் கொண்டே போனால் ஜீவஜந்துக்களுக்கென்று ஒரு தனி பாஷையும், அப்பாஷையின் மூலமாய் தங்கள் கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் படைத்திருக்கின்றனவென்று புலப்படுகின்றது. மேலும் யானை முதலியன பாகன் சொல்படிக் கேட்பதையும்; நாய் முதலியன எஜமானன் குறிப்பறிந்து நடப்பதையும்; குரங்காட்டி, எருதாட்டி முதலியோர் சொல்வதைப்போல் குரங்குகளும், எருதுகளும் நடிக்க வில்லையா? இப்படி மக்கள் சொல்வதையே அறிந்து நடக்கக்கூடிய விலங்கினங்கள், ஏன் தன் இனத்தாருடன் பேசிக்கொள்ளமுடியாது? இவ்விதம் அம்மிருகங்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பாஷை நமக்குத் தெரியாவிட்டால் அது யாருடைய குற்றம்? மிருகங் களின் குற்றமா? அப்படியாயின் சாலமோன் மன்னன் எறும்புகள் பேசியதை எவ்வாறு அறிந்தார்? தமயந்தி முதலியவர்கள் அன்னப் பறவைகள், கிளி முதலியவைகளைத் தூதாக விடுத்ததின் காரணம் என்ன? ஆகவே ஜீவராசிகளுக்கும் பாஷை உண்டு, அதன்மூலம் தங் கள் கருத்துக்களையும் அபிலாஷைகளையும் வெளியிடுகின்றனவென்ப தில் ஐயமில்லை.

ஆனால் மனிதர் சாதாரண மிருகங்களுக்குத் தெரியும் சொற்களை விட அநேகாயிரம் சொற்கள், பதங்கள் தெரியுமென்று பெருமை யடித்துக் கொள்ளலாமே யொழிய, மிருகங்களுக்கு சொற்களும், கருத்துக்களை வெளியிடும் பாஷையும் இல்லை என்று சொல்ல முடியாது. மனிதனுக்கு ஆசைகளும், கோரிக்கைகளும், பயமும், எண்ணங்களும் அதிகமாய் இருப்பதால் அவை யனைத்தையும் வெளி யிடக் கோடிக் கணக்கான சொற்கள் வேண்டியிருக்கின்றன. சொற்

களாலான பாஷையானது விசேஷ ஞானவானுக்கும், கொஞ்சம் அறிவுடைய ஒருவனுக்கும், சாதாரண கிராமத்தானுக்கும் வேண்டியதுதான். இவைகளைக் கூர்ந்துக் கவனித்தால் அவனவன் தன் வாழ்க்கையில் மேற்கொள்ளும் அளவுக்கு ஏற்றதாய் இருக்கின்றன. ஞானவானுக்கு லட்சக்கணக்கான வார்த்தைகள் தெரிந்திருந்தால்தான் அவனுடைய வாழ்க்கையை செவ்வனே நடத்த முடியும். ஆனால் கிராமத்தானுக்கு ஐந்நூறு, அறுநூறு வார்த்தைகள் போதுமானது. இந்தக் கொஞ்சம் சொற்களைக்கொண்டே எரு போடல், உழுதல் முதலிய வேலைகளை, செவ்வனே செய்கிறான். எனவே கொஞ்சம் வார்த்தைகள் தெரிந்த குடியானவனை பாஷை தெரியாதவனென்று சொல்லமுடியுமா? முடியாது. அவனுக்கு வேண்டிய மட்டிலும் அவனும் கல்விவான்தான். ஒருவனுடைய வாழ்க்கைக்கு ஏற்றவாறும், அவன் மேற்கொள்ளும் வேலையையும் பொருத்திருக்கிறது ஒருவனுடைய பாஷாஞானம். அப்படியிருக்க ஐந்தாறு சொல்லோ, ஒரே சொல்லோ, அல்லது ஏதாவதொன்றைக் கொண்டு தமது கருத்துக்களை வெளியிடும் பிராணிகளுக்கு மாத்திரம் பாஷை உண்டா இல்லையா என்று சந்தேகம் கொள்வது பொருந்துமா? ஜீவராசிகள் தங்கள் தங்கள் காரியத்தைச் செய்ய போதிய பாஷை அறிவைக் கொண்டிருக்கின்றன. இதில் சந்தேகமேயில்லை. மனிதனுக்குத் தெரிந்து இருப்பதைப் போல் அவ்வளவு பாஷா ஞானம் விலங்கினங்களுக்குத் தேவையில்லை.

(தொடரும்.)

மதிப்புரை

"கல்வி" இப்பத்திரிகை சென்னை, தியாகராஜ நகரில், ஸ்ரீ S. கோபால கிருஷ்ணன் அவர்களால் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. 1943, நவம்பர், டிசம்பர் மாதப்பிரதிகள் நம் பார்வைக்கு வந்தன. வருட சந்தா ரூ. 2-4-0. இப்பத்திரிகையில் ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் பயன்படக்கூடிய கட்டுரைகள் உள்ளன.

பத்திராதிபர்,

"போதனாவிஷயப் பூங்கொத்து".

விடுகவி விடைகள்

(கொத்து 34, மலர் 5, 6 பக்கம் 84)

விடைகள் :—(1) விராட்டி. (2) பேன். (3) ரயில்.

தேனீ வளர்த்தல்

(கொத்து 34, மலர் 4, பக்கம் 71-ன் தொடர்ச்சி.)

(S. Marimuthu, Manager, Jothi Kalvi Nilayam, Erode.)

1. தேனீ வளர்க்கும் பெட்டி. 2. கூர்மையான கத்தி. 3. காலி நெருப்புப்பெட்டி. 4. தீக்குச்சியுடன் நெருப்புப்பெட்டி. 5. காய்ந்த வாழை நார். 6. குச்சியில் துணி சுற்றிய பந்தம். 7. கடப்பாறை. 8. தலையணை உறை.

மேலே சொல்லிய சாமான்களை எடுத்துக்கொண்டு தேன் கூடு கட்டியுள்ள இடத்திற்குக் காலை அல்லது மாலை நேரத்தில் செல்ல வேண்டும். தேனீ வரவும் போகவும் உள்ள சந்து கை நுழையுமா என்று பார்க்கவேண்டும். கை நுழையாவிடில் கடப்பாறையால் மெதுவாக கை நுழையும்படி கற்களைப் பெயர்த்து எடுக்கவேண்டும். பிறகு கைகளை உள்ளேவிட்டு முதலில் உள்ள அடையின் இரண்டு ஓரங்களையும் பிடித்து மெதுவாக முன்னும் பின்னும் அசைத்தால் அடை வந்துவிடும். அந்த அடையை மெதுவாக வெளியே கொண்டு வந்து ராணீ அந்த அடையில் இருக்கிறதா இல்லையா என்று பார்த்த பிறகு ஒரு சட்டத்தை (Frame) எடுத்து அடையை சட்டத்தினுள்ளே வைத்து வாழை நாரினால் இரு பக்கமும் கட்டவேண்டும். அடை பெரிதாக இருந்தால் கத்தியால் சட்டத்தின் அளவுக்கு அறுத்து அடையிலுள்ள ஈக்களுக்குத் தொந்திரவு இல்லாமல் கட்டவேண்டும். கட்டினதை பெட்டியினுள் வைத்து பெட்டியைத் திறந்தேவைக்க வேண்டும். மறுபடியும் இரண்டு கைகளையும்விட்டு அடையை எடுத்து ராணீ உள்ளதா என்று பார்த்து சட்டத்தில் வைத்துக்கட்ட வேண்டும்.

ராணீ மற்ற ஈக்களைவிட பெரிதாகவும், கொஞ்சம் நீண்டும் இருக்கும். ராணீ உள்ள அடை கிடைத்துவிட்டால் அதைப் பத்திர மாகச் சட்டத்தில் கட்டி பெட்டியினுள் வைத்து மூடிவிடவேண்டும். பெட்டியை எடுத்து கொஞ்ச தூரம் தள்ளிவைத்துவிட்டால் பொந்தி லுள்ள ஈக்கள் எல்லாம் நமது கூட்டிற்கு வந்துவிடும். பிறகு பொந்திலுள்ள அடைகளை எல்லாம் எடுத்து எல்லா சட்டங்களிலும் வைத்துக்கட்டவேண்டும். எல்லா ஈக்களும் நமது பெட்டிக்கு வந்த பிறகு பெட்டியின் தலைவாசலை அடைத்து நமது இருப்பிடத்திற்குக் கொண்டுவந்து ஒரு ஸ்டாண்டின்மேல் வைத்து ஸ்டாண்டின் நான்கு கால்களுக்கும் நான்கு சட்டிகளில் தண்ணீர் ஊற்றிவைத்து மூடிய தலைவாசலைத் திறந்துவிடவேண்டும். (தொடரும்.)

‘கோகினூர்’

(By S. Gopalakrishnan, Jayankondam)

Scene 1

முகமதுஷா—டில்லி சக்ரவர்த்தி, அவர் பொக்கிஷ குமஸ்தா—துலீப்,—நாதர்ஷா படையெடுப்பால் பயந்து, சர்தார் என்னும் மூட வேலைக்காரன் வழிகாட்ட டில்லியை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் புறப்படுகிறார்.

துலீப்: இன்னும் அதிகதூரமிருக்கிறதோ? சர்தார்!

சர்தார்: இல்லேங்க, எஜமான். ஐந்து கல்தானுங்க இருக்கு.

துலீப்: இருட்டாய்விட்டது. காலை வெட்டிப்போட்டு நட.

சர்தார்: ஐயையோ! காலை வெட்டினால் எப்படி நடப்பது!

துலீப்: அட முட்டாள்! வெட்டி நட என்றால் சுறுக்க நட என்று அர்த்தம்.

சர்தார்: என்ன எஜமான் நான் முட்டாளானால் புத்திசாலியான தங்களுக்கு வழிகாட்ட முடியுமா? சொல்லுங்க.

துலீப்: போதும் போதும். வாயை மூடு. அப்பாடா இந்த மூட்டை என்ன கனக்குது!

சர்தார்: ஆமாங்க என் காசு முடிச்சும் இடுப்பிலே உறுத்துதுங்க!

துலீப்: உஸ்! யார் காதிலாவது விழப்போகிறது! பணமும் போய்விடும். உயிரும் போய்விடும். நாதர்ஷா சிப்பாய்கள் வழிபறித் திருடர்கள். உஷார். மூட வேலைக்காரனும் மொட்டைக்கத்தியும் கையைத்தான் வெட்டும். யாரோ இருவர் வருகிறார்கள். அதோ அந்த மரத்தடியில் நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொள். மூச்சுகூட பலமாக விடாதே. நான் இந்தப் புதரில் ஒளிந்துகொள்ளுகிறேன்.

(இருவரும் சொன்னபடி செய்தல்)

நாதர்ஷா சிப்பாய் இருவர் கம்ரானும் காதரும் வருதல்.

கம்ரான்: நாட்டைவிட்டு, ஊரைவிட்டு, வீட்டைவிட்டு, வாசலை விட்டு ஏண்டா இங்கு வந்தோம்? பேராசைதானே!

காதர்: ராஜாவுக்குத்தான் ஆசையில்லையோ? கொள்ளை ஏன் அடிக்கிறார் அதைச் சொல்லு. கொள்ளையடிக்கிற ராஜாவுக்குப் பிடுங்கித் தின்கிற மந்திரி, பொறுக்கித் தின்கிற ஆட்களாம்.

கம்ரான்: நம்ம ராஜாவுக்கு டில்லி சக்ரவர்த்தி வேண்டியதெல்லாம் தருகிறாரே! நம்ம ராஜாவும் அகப்பட்டவரையில் சுருட்டுகிறாரே. உம். அவர் பாடு வேட்டைதான்.

(சர்தார் கால்தடுக்கி விழுதல்) டே, டே இது என்னடா கட்டை மாதிரி கிடக்கு. (குனிந்து பார்த்தல்) கட்டையில்லேடா. பிணம் டோய்.

காதர் : பிணம் என்றதும் பதறிவிழுதல்.

சர்தார் : யாருடா கட்டை என்று சொன்னது. கட்டை சட்டை போட்டுக்குமோ. பிணமாம்! பிணத்தின் இடுப்பிலே பணமிருக்குமோ! பணம் இல்லாதவன்னு பிணம்னு சொல்லுவா.

கம்ரான் : பணம் வைத்திருக்கிருயா (சந்தோஷப்படுதல்) காட்டு பார்ப்போம். (என்று இடுப்பிலுள்ள பணத்தைப் பறித்தல்) மஹா பணம் வைத்திருக்கிருண்டா! நாலைந்து செல்லாக்காசு வைத்துக் கொண்டு ஜம்பம் அடிக்காதே.

(புதரிலுள்ள துலீப் கையை உதறுதல்-பிசைதல் தலையில் அடித்துக்கொள்ளல்)

சர்தார் : செல்லாக்காசுன்னு சொல்றே. எங்க எஜமான் அதோ ஒளிந்திருக்கிருரு. பொக்கிஷ குமஸ்தா. அவரை வேணும்னு கேளு. அவரைவிட, எங்க எஜமானைவிட உனக்கு ரொம்ப நோட்டம் தெரியுமோ?

கம்ரான் : (காதரைப் பார்த்து) இவனைப் பிடித்துக்கொள். இவன் எஜமானை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

புதரில் சென்று துலீபை மூட்டையுடன் இழுத்துவருதல். கம்ரானும் காதரும் மூட்டையைப் பறித்துக்கொண்டு போய்விடுதல்.

துலீப் : இந்த முட்டாளைக் கட்டிக்கொண்டு நம்மால் அழ முடியாது. திருடனைவிட முட்டாள் அதிக ஆபத்து தருவான் என்பது அறியாமல் போனேனே.

திரை விழுதல்

முகமதுஷாவும் நாதர்ஷாவும் தர்பாரில் மந்திரிகள் புடைசூழ அரியணையில் வீற்றிருத்தல்.

முகமதுஷா : பாரசீக மன்னர் நாதர்ஷா நமது எளிய அரண்மனையில் இதுகாறும் தங்கியிருந்து இன்பமூட்டி எம்மைக் கௌரவித்ததற்கு நாம் நன்றி செலுத்துவோமாக. அவர் நம்மை விட்டு தம் நாடு செல்கிருர். பிரியாவிடை பெற வந்திருக்கிருர். ஆகையால் அவருக்கு தக்க சீரும் சிறப்பும் சித்தமாக்குக.

மந்திரி : மஹாராஜ் யாவும் இதோ வந்துவிட்டன. (பொன்னும் மணியும் பூஷணமும் தட்டுத் தட்டாக வரிசை வரிசையாக நாதர்ஷா முன்பு வைத்தல்.)

நாதர்ஷா : (எழுந்து அவைகளைக் கண்டு கண்கொட்டாமல் பார்வையிடுதல்) என் நண்பர் நம்பிரிவுக்கு வருந்துகிருர். அவர் அன்பும் ஆதரவும் உபசாரமும் நம்மை குதூகலிக்கிறது. எனது டில்லி விஜயம் என்றும் மறக்கற்பாலதன்று.

நாதர்ஷாவின் பிரதானி அவர் காதில் ஏதோ சொல்லுதல்.

நாதர்ஷா: (மீண்டும்) வேந்தே! நான் தங்களைக் காணவந்தபொழுது தங்கள் தேசாசாரப்படி வரவேற்றீர்கள். இன்று பிரியும்பொழுது எமது தேசாசாரப்படி பிரிவு உபசாரம் நிகழ்த்த எண்ணுகிறேன். தங்கள் சித்தம் யாதோ?

(முகமதுஷா:—அவ்வாறே ஆகுக.)

நாதர்ஷா எழுந்து தன் உடைவாளை முகமதுஷாவுக்கு அளித்தல். முகமதுஷா தன் உடைவாளை நாதர்ஷாவுக்கு அளித்தல்.

நாதர்ஷா தன் தலைப்பாகையை கழற்றி தட்டில் ஏந்தி முகமதுஷாவுக்குக் கொடுத்தல். முகமதுஷா வாடிய முகத்துடன் திகைத்து நிற்றல். நாதர்ஷா முகம் சிவக்கக்கண்டு தன் முடியை கழற்றி தட்டில் வைத்தல்.

நாதர்ஷா (விரைந்து தட்டைப்பெறுதல்)

(முகமதுஷா மூர்ச்சித்தலைக் கண்டு) நாதர்ஷா:—நமது பிரிவாற்றாமையாலல்லவோ மன்னர் துக்கத்தால் மீதூர்ந்திருக்கிறார். என்னே! இவர் அன்பும் பரிவும்—வேந்தே! தங்கள் நட்பும் உறவும் நான் உயிருள்ளளவும் மறவேன். (கிரீடத்தைப் பார்த்தல். அங்குள்ள கோஹினூர் வைரத்தின் ஜோதியைக் கண்டு ஆ! ஜோதி மலையே! கோஹினூர்! என பிரமித்தல்.

முகமதுஷா:—(வேரற்ற மரம்போல் சாய்தல்) ஹா! நாகம் மணி இழந்தபின் உயிர்தரிக்குமோ!

திரை விழுதல்

EST. 1935. ஸ்தாபிதம் 1935
சிறுவர் அறிவுக்கதிர்
CHILDREN'S MAGAZINE

வீடுகளுக்கும் பாடசாலைகளுக்கும்
மிக அவசியமான மாதப்பத்திரிகை
விளம்பரத்திற்கு மிகவும் ஏற்றது
டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை
வருட சந்தா: உள்நாடு ரூ 1½ வெளிநாடு ரூ ௨-௮
ஆபீஸ். ஈரோடு. தென்னிந்தியா.

பெற்ருேர் சங்கங்கள்

26-10-43-ல் குளித்தலை, அக்குலம்பட்டி லேபர் பாடசாலை பெற்ருேர் சங்கம், கி. மு. ஸ்ரீ P. வெங்கட்டராமன் அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் கனம் லேபர் ஆபீஸர் அவர்களால் ஏழை மாணவர்கட்குத் துணிமணிகள் வழங்கப்பட்டன. கூட்டம் இனிது முடிந்தது.

P. I. Arokiasamy, Secretary.

31-10-43-ல் செல்லம் உ. ஆரம்பப் பாடசாலையின், (உரத்தூர்-தஞ்சை) பழைய மாணவர் சங்கம், கல்வி கண்காணிப்பாளர் உயர் திரு. E. V. கோபாலய்யர், B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் வெகு விமரிசையாய் நடைபெற்றது. மேலும் ஷை பாடசாலையின் வெள்ளி விழாவைக் கொண்டாட முயற்சிகள் செய்யும் வகைகாணும் தீர்மானங்கள் நிறைவேறின.

P. திருஞானசம்பந்தம், காரியதரிசி.

6-11-43-ல் தென் ஆற்காடு ஜில்லா திண்டிவனம் ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர்களின் வருடாந்திரக் கொண்டாட்டமும், பொருட்காட்சி சாலைத் திறப்புவிழாவும், ஷை ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அவர்களது தலைமையின்கீழ் வெகு குதூகலத்துடன் நடைபெறலாயின.

K. N. Munisamy Pillai, General Secretary.

7-11-43-ல் ஈரோடு ஜோதி கல்வி நிலையம் பாடசாலையின் பெற்ருேர் சங்கம் கல்வி அதிகாரி ஸ்ரீ V. K. ராமன் மேனன் அவர்கள் அக்கிராஸனம் வகிக்க, இனிது நிறைவெய்தியது. அவ்வமயம் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி R. குமுதவல்லி அம்மையவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தனர். ஸ்ரீமதி ராஜம்மாள் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் "பெண்கல்வி"யைப்பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

S. Marimuthu, Manager.

8-11-43-ல் கரூர் திருக்காம்புலியூர் லேபர் பாடசாலை, பெற்ருேர் சங்கக் கூட்டம் ஷை ரேஞ்சு டெப். இன்ஸ். உயர்திரு. T. S. வைத்யநாத ஸ்வாமி B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் சிறப்பாய் நடைபெற்றது.

V. Natesan, H. M. & Secretary.

13-11-43-ல் திருநெல்வேலி ஜில்லா சொக்கன்குடியிருப்பு, தட்டாமடம் இப்பாடசாலைகளின் உபாத்திமைச் சங்கக் கூட்டம் ஸீனியர் டெப். இன்ஸ். ஸ்ரீ ஸ்ரீனிவாசன் B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் நன்கு நடைபெற்றது. சிற்றுண்டி வழங்கப்பட்டது.

22-11-43-ல் விரகாலூர் R. C. அர்ச். இராயப்பர் உயர்தர ஆ. பாடசாலையின் பெற்ருேர் சங்கமும், யுத்தப்பிரசாரக் கூட்டமும்,

திருச்சி ஜில்லா உதவி கல்வி அதிகாரி ஸ்ரீ வீராஸாமிப் பத்தர் M.A., L.T. அவர்களின் தலைமையில் கூடின. அரிய சொற்பொழிவுகளும், இராஜ, தேச வாழ்த்துப்பாக்களும் நிகழலாயின. கூட்டம் இனிது முடிவெய்தியது. இரா. நடராஜன், தலைமை ஆசிரியன்.

26-11-43-ல் மரக்கடை போர்டு பாடசாலையின் கிராமச் சீரமைப்பு வார விழா நீடாமங்கலம் சப்மாஜிஸ்ட்ரேட் ஜனுப் அப்துல் ரஸாக் அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ. A. வெங்கடரமணி B. Sc. (Hons) அவர்கள் "சிக்கனம்" என்பதைப்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

M. S. Arokiasamy.

5-12-43-ல் தென்காசித் தாலூகா மின்னடிச்சேரி, ஸ்ரீ செல்வம் இந்து இலவச எலிமெண்டரி பாடசாலையின் பெற்றோர் சங்கம் ஸீனியர் டெப். இன்ஸ். ஸ்ரீ R. சிவராமய்யர் B.A., L.T. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. பெற்றோர்களுடன் ஒற்றுமைப்பதைப்பற்றிய சொற்பொழிவுகள் நிகழலாயின. வந்தனோபசாரங்களுடன் கூட்டம் இனிது கலைந்தது.

P. S. Pichandi Chettiar, Manager.

துறையூர் ஆரம்ப ஆசிரிய சங்கம் (முசிரிவட்டம்)
ஆண்டு விழா

1943-ம் ௵ டிசம்பர்-௴ 25-ந் தேதி சனிக்கிழமை, ஷை சங்கத்தின் ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அது சமயம் திரு. S. முருகேசமுதலியார், B.A., L.T., District Educational Officer, Trichy தலைமை வகித்தார். திருச்சி, தேசீயக் கல்லூரி Prof. Sri. M. S. சீனுவர்சஸர்மா M.A., Lecturer in Philosophy. "ஆசிரியர் பொறுப்பும் கடமையும்" என்பதுபற்றி சொற்பொழிவு ஆற்றினர். முசிரி ரேஞ்சு இரு இன்ஸ்பெக்டர்களும் ஆஜராயிருந்தனர். பிறகு உள்ளூர் யுத்தப்பிரசாரகர் திரு. கூத்தப் பெருமாள் அவர்கள் யுத்தமும் நமது கடமையும் என்பதுபற்றி பேசினர். விளையாட்டுப்போட்டி, சங்கீதப்போட்டி, விநோத உடைப் போட்டி முதலியவற்றில் ஜெயித்தவர்களுக்கு தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன. பிறகு காரியதரிசி அவர்களால் எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

Turaiyur,
3—1—44.

(1) G. M. Perumal Naidu,
(2) T. M. Sundaresa Sarma,
காரியதரிசிகள்.

189989

புதுவருஷ வாழ்த்து

22, ரதிப்ரியா — ஆதிதாளம்

பல்லவி

; ஸ்ஸாகிபா கா ; ; ரிம	கா ; ஸாரீ	கா; பா; ‖
. மனம்களித் தே. . புது	ஆ . ண்டினில்	வாழ் வீர் ‖

அனுபல்லவி

; ஸ்ாநீஸ்ா நீ ; பாநீ	; பா நீகா	ரிக்ரிஸ் நீஸ்ா ‖
. தீ ன த யா . பரன்	. ந லம	தோ . . ங்க ‖
; நீ , நி நீ நீ ;பநிஸ்ரி	க்ாரீ , ஸ்நீ	நீ ; ரீ ; ‖
. தின்மைகள் யா.வும்...	. பூ . வினில்	நீங் . க . ‖ மனம்

சரணம்

; ஸா , ஸரீ கா ; பாபா	; கா ரீ ;	ஸா ; ரீஸா ‖
. செல்லும் . பொருளுடன்	. கல் வி .	ஞா . னமும் ‖
; கரி ஸாரீ கா ; ; பப	; க ரி [illegible]	கபா, ; ; ‖
. நல் லு யர் . . புகழ்	. யா .	மே . . ‖

அனுபல்லவி எடுப்பு :

வல்லபனி னருளா லமைந்திட
சொல்லுரை யாலே போற்றிடவே தினம்

2. பூவிலெங்குமே நற்சமாதானம்
தீவிரித் துயர் வாகிட
ஜீவியமே தரும் நாதன் பாதமே
சேவிப்போம் நாம் கானமுடன் தினம் (மனம்)

3. எங்குமே புகழ் தாங்கிடுமுயர்
பூங்கொத்தின் மணம் ஓங்கியே
திங்கள் ஒளியென வளர்ந்திலங்கி
மங்கள மென்றே வாழ்த்துரை கூறிட (மனம்)

தமிழ்நாடு ... காப்பக ...
சென்னை-600 008

Look Sharp! Ready for Sale!! Order at once!!!

E. S. L. C. VIII Std. Excellent Examiner 1944

Selling like hot cakes, Free Prize Rs. 50 will be yours, if copies purchased before the 15th Dec. 1944.

1944-ம் வருட சர்க்கார் எட்டாம் வகுப்பு பரீட்சை விசேட வினவிடைப் புத்தகம் (விலை ரூ. **1-5-0**)

Thoroughly revised and enlarged 3rd Edition (150 Pages.) with all possible and expected Questions and answers in all E. S. L. C. Public Examination Subjects—(Tamil, Arithmetic, History, Geography & Civics) 1st. and 2nd Editions were highly praised and appreciated in all higher Ely. Schools in the presidency.

1944-ம் வருட 8-ம் வகுப்பு

தமிழ்ப்பாடப் புத்தக விளக்க உரை : விலை **12** அணா.

Explanatory Notes on VIII Std. Tamil Text 1944

Concession Rates: (1) All Head-Teachers of Higher Ely. Schools can have specimen copies if they send Re. 1-12-0 in advance for both the Examiner and Tamil Annotation.

(2) One copy will be sent free for every 6 copies purchased at one time in each set.

சிறுவர் அறிவுக்கதிர் : **Children's Magazine**

Estd. 1935. Annual Subscription Re. 1-8-0.

The best and most useful Magazine. Well appreciated by the public and highly recommended by the Educational Authorities: Each and every Home, School, and Reading Room should own a copy.

Apply to: THE MANAGER,
"**SIRUVAR ARIVUKKATHIR OFFICE**", *ERODE.*

N. B.—Liberal commission for bulk orders.

Reg. No. M. 1534

OUR EMPLOYMENT BUREAU

The **Bodhana Vishaya Poongothu** is being read every month by thousands of Teachers, hundreds of Teachers' Associations in addition to the numerous Pupil-Teachers in the Training Schools, throughout the Tamil-speaking Districts. This is the best medium of its kind for the advertisement of requirements of Schools. Short "Wanted" advertisements will be published on payment of Re. 1/- from Managers who are subscribers and Re. 1-8-0 from non-subscribers. The subscribing Managers shall quote their subscription numbers while placing an order at the concession rate in Our Employment Bureau.

THE EDITOR,
The Bodhana Vishaya Poongothu,
TRICHINOPOLY.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.